**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.66/2022**

**பி.வா.சா. –2–விஜயசாந்தி**

**நாள். 19.01.2026**

**பி.வா.சா.2 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் 22 ஆம் பிரதிவாதியாவேன். 23,24,25,26 ஆம் பிரதிவாதிகளை பார்த்திருக்கிறேன் ஆனால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை 23,24,25,26 ஆம் பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கின் 1 முதல் 8 பிரதிவாதிகளை தெரியும். இறந்துபோன 9 ஆம் பிரதிவாதி வெள்ளைச்சாமியை தெரியும். 10 முதல் 12 ஆம் பிரதிவாதிகளை தெரியும். இறந்து போன 13 ஆம் பிரதிவாதி சதாசிவம் என்பவரை தெரியும். 14 முதல் 19 வரையான பிரதிவாதிகளை தெரியும், 20 ஆம் பிரதிவாதியான ராஜாவிடம் தான் நான் தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் ஒரே ஊரை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். வழக்கிற்கு முன்பு சொத்து சம்பந்தமாக பிரச்சனைகள் எதுவும் நடைபெற்றதா என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் 17.07.1953 தேதிய கிரைய பத்திரம் கைலாசம் என்பவர் ஆண்டியப்பன் சேர்வைக்கு கிரையம் செய்தது பற்றி எனக்கு தெரியும். மேற்படி பத்திரம் தாவா வழக்கில் 1,2 அயிட்ட சொத்துக்கள் சம்பந்தமப்பட்டது. மேற்படி கிரைய பத்திரத்தை நான் பார்த்ததில்லை. நான் 20 ஆம் பிரதிவாதி ராஜாவிடம் கிரையம் பெறும் போது மேற்படி பத்திரத்தை நான் கேட்டு பெற்றேனா என்றால் அவர் எனக்கு தரவில்லை. மேற்படி கிரைய பத்திரத்தை பற்றி எப்படி தெரியும் என்றால் வழக்கிற்கு பின்னிட்டு நான் தெரிந்து கொண்டேன். அதன் பின்னர் 20 ஆம் பிரதிவாதி ராஜாவிடம் கேட்டேன் அவர் எந்த பிரச்சனையும் இல்லை என்று உறுதியிட்டார். ஆனால் மேற்படி பத்திரத்தை தரவில்லை பத்திரத்தின் விபரத்தை மட்டும் கூறினார். நான் கிரையம் பெற்ற பின்னர் எனது பெயரில் பட்டா மாற்றம் செய்ய பெற்றேன். எனது பெயரில் மாற்றப்பட்ட பட்டாவை இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பட்டாவை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 1953 ஆம் ஆண்டு கைலாசம் பெயரில் இருந்து ஆண்டியப்பன் சேர்வைக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டதா இல்லையா என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. ஆதியில் தாவா சொத்தானது யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் கைலாசத்திற்கு பாத்தியப்பட்டது. அதன் பட்டா எண்.113 ஆகும். தாவா சொத்திற்கு பத்திரம் கிடையாது என்றும், ஆதியில் பட்டா மட்டுமே இருந்தது என்றால் சரிதான். கைலாசத்திடம் இருந்து ஆண்டியப்பனுக்கு கிரையம் செய்து கொடுத்த பின்னர்

ஆண்டியப்பன் யாருக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் அவரின் மகன் வெள்ளைச்சாமிக்கு கிரையம் எழுதிக்கொடுத்தார், அவர் தாவா வழக்கில் 9 ஆம் பிரதிவாதி. மேற்படி கிரையம் பெற்ற சொத்தானது வெள்ளைச்சாமிக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்தா என்றால் இல்லை, வெள்ளைச்சாமியின் வாரிசுகள் 10 முதல் 12 ஆம் பிரதிவாதிகள் என்னுடைய கிரைய பத்திரத்தில் கையொப்பமிட்டனர். 10 முதல் 12 ஆம் பிரதிவாதிகள் தாவா வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. 9 முதல் 12 ஆம் பிரதிவாதிகளிடமிருந்து 20 ஆம் பிரதிவாதி ராஜாவிற்கு கிரையம் கொடுக்கப்பட்டது. அவரிடமிருந்து பின்னிட்டு நான் கிரையம் பெற்றேன். 05.01.2015 ஆம் தேதிய ராஜாவின் பெயருக்கு ஏற்பட்ட கிரைய பத்திரம் நான் பார்த்துள்ளேனா என்றால் நான் அதை பி.வா.சா.ஆ.2 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். ராஜா கிரையம் பெறுவதற்கு முன்பாக வெள்ளைச்சாமிக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் வெள்ளைச்சாமியின் தகப்பனார் ஆண்டியப்பன் இறப்பிற்கு பிறகு அவருக்கு சொத்து பாத்தியப்பட்டு பின்னிட்டு அவரின் வாரிசுகளுக்கு கிடைக்கபெற்று ஆண்டு அனுபவித்து வந்தனர். நான் கிரையம் பெற்ற போது பி.வா.சா.ஆ.2 ஐ தவிர வேறு எந்த பத்திரமும் நான் பார்க்கவில்லை. தாவா வழக்கில் 20 ஆம் பிரதிவாதி எதிருரை எதுவும் தாக்கல் செய்துள்ளாரா இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியாது. மற்ற பிரதிவாதிகளும் இந்த வழக்கில் எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கிரையம் வாங்கிய பத்திரத்திற்கு ஆதாரமாக உள்ள 1953 ஆண்டில் ஏற்பட்ட மூல பத்திரமான போலியாக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய போது வில்லங்க சான்றிதழ் சுமார் 50 வருடங்களுக்கு பார்த்தேன். மேற்படி வில்லங்க சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற போது வாதி மற்றும் 1 முதல் 8 ஆம் பிரதிவாதிகள் 2 வது அயிட்ட சொத்தை வாங்க வேண்டாம் என்று சொல்லியும் நான் கேட்காமல் நான் வாங்கிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் வாங்கிய விபரம் தெரியும். நான் வாங்கிய சொத்திற்கான மூல பத்திரங்கள் அனைத்து செல்லாது என்று இந்த வழக்கில் பரிகாரம் கோரியுள்ள விபரம் எனக்கு குறிப்பாக தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள கிஸ்தி ரசீதுகள் நான் கிரையம் பெற்ற பிறகு என் பெயரில் தாக்கலானது. 23 ஆம் பிரதிவாதி பாலமுருகன் என்பவர் யார் என்றால் ஒரே ஊரை சேர்ந்தவர் என்ற விதத்தில் தெரியும். முதல் பிரதிவாதி முதல் 8 ஆம் பிரதிவாதிகள் எனக்கு சொந்தமா என்றால் இல்லை. ஒரே தெருவில் வசிப்பவர்கள் என்ற முறையில் தெரியும். 1953 ஆம் ஆண்டு கிரையம் பத்திரம் செல்லாது என்று தெரிந்திருந்து வேண்டுமென்றே இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. எனவே, தாவா 1,2 அயிட்ட சொத்துக்கள் வாதிக்கும், 1 முதல் 8 ஆம் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மற்ற

பிரதிவாதிகள் வேண்டுமென்றே என்னுடன் சேர்ந்து கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தோன்றா தரப்பினராக பவிக்கப்பட்டுள்ளார்கள் என்றாலும், வழக்கின் உண்மை தன்னையை அவர்கள் நீதிமன்றத்தில் மறைக்க முற்படுகின்றனர் என்றால் சரியல்ல. எனவே, வழக்கின் விபரம் அனைத்து தெரிந்து இருந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**1 முதல் 8 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** வாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.01.19 19:01:26 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.